பணிச்சுமை – நேரமின்மை – வயதைக் கடந்து சாதனை!

கல்விபெறத் துடிக்கும் அனைவருக்கும் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறந்த முன்மாதிரி!

வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,நவ.18-

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு "முனைவர்" பட்டம் பெற்றது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

When leaders learn, generations dream bigger!

என் நண்பனின் இடத்தில் இருந்து பெருமையுடன் மகிழ்கிறேன்! "முனைவர்" பட்டம் பெற்றுள்ள பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு வாழ்த்துகள்!

கல்வியே நமது உயர்வுக்கான வழி; அதிலும் ஆராய்ச்சிப் படிப்பு வரை நமது தமிழ்நாட்டு மாணவர்கள் முன்னேற வேண்டும் என்ற எனது சொல்லை, எனது அமைச்சரவையிலும் - குடும்பத்திலும் இருந்து கடைப்பிடித்திருக்கிறார் திரு. அன்பில் மகேஸ்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் - மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றிக் கொண்டே முனைவர் பட்டம் பெற்றுள்ள அவர், பணிச்சுமை - நேரமின்மை - வயது ஆகியவற்றைக் கடந்து கல்விபெறத் துடிக்கும் அனைவருக்கும் 'Role Model' ஆகிவிட்டார்!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு. கழக துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆகியோர் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொருளாளர் முன்னாள் விழுப்புரம் நகர மன்ற தலைவர் விழுப்புரம் இரா.ஜனகராஜின் புதல்வர் அருண்குமாரின் திருமணத்தையொட்டி நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்கள். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி சக்கரை, நகராட்சித் துறை அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.

அரியலூர் மேல்நிலைப் பள்ளியில்

மாணவ- மாணவியர்க்கு விலையில்லா மிதிவண்டிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர்,நவ.16-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியதை தொடர்ந்து அரியலூர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர் தரமான கல்வியை கிடைக்கச் செய்து அவர்களது வாழ்வை முன்னேற்றும் வகையில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொருளாதார சூழ்நிலையால் அவர்களது கல்வி எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2025 -26ஆம் கல்வி ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் துணை முதலமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடை பெற்ற விழாவில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக அரியலூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 3,306 மாணவர்கள், 3,582 மாணவியர்கள் என மொத்தம் 6,888 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், சி.எஸ்.ஐ மேல்நிலைப் பள்ளி, நிர்மலா (பெ) மேல்நிலைப்பள்ளி மற்றும் அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளை சேர்ந்த 778 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின் சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின்கீழ் பயன் பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி காவியா தெரிவித்ததாவது,

எனது பெயர் காவியா. நான் அரியலூர் பெரிய தெருவில் வசித்து வருகிறேன். அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். நான் தினமும் பள்ளிக்கு நடந்து வருகிறேன். இந்நிலையில் எனக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக தினமும் பள்ளிக்கு சரியான நேரத்தில் சென்று வருவதுடன், மாலை பள்ளி முடிந்தவுடன் தாமதமின்றி விரைவாக வீட்டிற்கு செல்ல முடியும். நான் சிறந்த முறையில் கல்வி கற்க, சிரமமின்றி பள்ளிக்கு சென்று வரும் வகையில் விலையில்லா மிதி வண்டியை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாணவி காவியா தெரிவித்தார்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின்கீழ் பயன் பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் ஸ்ரீராம் தெரிவித்ததாவது,

எனது பெயர் ஸ்ரீராம். நான் அரியலூர் அரசு மேல்நிலைபள்ளியில் பயின்று வருகிறேன். தினமும் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வருகிறேன். சில நேரங்களில் சரியான நேரத்தில் பள்ளிக்கு வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில் தமிழ்நாடு மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எனக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதனால் தினமும் நான் பள்ளிக்கு மிதிவண்டியில் எளிதாக சென்று வருவதுடன், குறிப்பிட்ட நேரத்திற்கு தாமதமின்றி பள்ளிக்கு செல்வதுடன், வீட்டிற்கும் சரியான நேரத்திற்கு வர முடிகிறது. இதனால் எனது கல்வி தரம் மேம்பாடு அடைந்துள்ளது. அரசு பள்ளியில் பயிலும் என்னைப்போன்ற ஏழை, எளிய மாணவர்களும் சிரமமின்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் வகையில் விலையில்லா மிதி வண்டியை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாணவன் ஸ்ரீராம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், முதன்மைக்கல்வி அலுவலர் மா.ரேணு கோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத் துறை அலுவலர் (பொ) பி.சுமதி, மாவட்டக்கல்வி அலுவலர் ஆ.பாலசுப்ரமணியன், நகர்மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, நகர கழக செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர் தெயவ.இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஏற்பாட்டில்

திருவிடைமருதூர் தொகுதி கழக நிர்வாகிகள் பயிற்சிப் பட்டறை!

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரை!

தஞ்சை, நவ.16.

தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி பாக முகர்வர்கள் பயிற்சி கூட்டம் சாரதா மஹாலில் நடைபெற்றது.

உயர்கல்வித்துறை அமைச்சரும், திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான முனைவர் கோவி. செழியன் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி கூட்டத்திற்கு தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும், கழக முதன்மை செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான கே.என். நேரு தலைமை வகித்தார். தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, திருவிடை மருதூர் தொகுதி பார்வையாளர் முனைவர் குறிஞ்சி வாணன், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் கோ.க. அண்ணாதுரை, கூகூர் சி.அம்பிகாபதி, உள்ளூர் டி.கணேசன், உதயா இரவிச்சந்திரன், மிசா.என்.மனோகரன், ஜெ.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார். கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தியாசிரியர் திருமாவேலன் மற்றும் சிந்தனை எழுத்தாளர் மதிமாறன் ஆகியோர் தொடக்க உரையாற்றினர்.

இப்பயிற்சி கூட்டத்தில் தி.மு.க முதன்மை செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது, தி.மு.க மீண்டும் ஆட்சி அமைக்க வாக்குச்சாவடி முகவர்கள் பணி மிக முக்கியமானது. இப்பயிற்சியில் அளிக்கும் முழு தகவலையும் தெரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும். நாம் இக்கட்டான காலகட்டத்தில் இருக்கிறோம். பீகார் தேர்தலில் ஜெயிக்கவே முடியாது என்று நினைத்தவர்கள் எல்லாம் ஜெயித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தற்பது நடைபெறும் பயிற்சி பட்டறையோடு நீங்கள் எஸ்.ஐ.ஆர். வேலைகளை பார்க்க வேண்டும். நான்காம் தேதி வரை அந்த வேலையில் முழு கவனம் செலுத்த வேண்டும். அதன் பிறகு எந்த வாக்காளர் பெயர் விடுபட்டுள்ளது, சேர்க்க வேண்டும் என்பதை சரியாக கண்டறிந்து அதை குறித்த தேதியில் ஒப்படைக்க வேண்டும். அப்படி எல்லாம் செய்ய தவறினால் ஓட்டு போட முடியாது. மாண்புமிகு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சி அமைய டெல்டா மாவட்டங்களில் உள்ள 40 சட்டமன்ற தொகுதியும் வெற்றி உறுதி செய்யப்பட வேண்டும். இதில் முக்கியமான காரணம் என்ன வென்றால் மற்றவர்கள் கவனம் டெல்டா பக்கம் இல்லை இதை நாம் நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்றார்.

இப்பயிற்சி கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம் தொகுதி), அன்னியூர் சிவா (விக்கிரவாண்டி தொகுதி), திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சார்பணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், இளைஞர் அணி பாக முகவர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில் ஒன்றிய செயலாளர் சுந்தர.ஜெயபால் நன்றி கூறினார்.

சொ.வேலு எம்.சி. முன்னிலை! ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை!

எழும்பூர் 99வது வட்டத்தில் 'அன்னம் தரும் அமுதக் கரங்கள்'!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு காலை உணவு வழங்குகிறார்!

சென்னை, நவ. 18 -

எழும்பூர் - 99வது வட்டக் கழகச் செயலாளர் ஆம்.எம்.ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் - கழகத் தலைவர்-திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி 99வது வட்டத்தில் திடீர் நகர் பிரிக்ளின் சாலை சந்திப்பில் இன்று (18.11.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 7.00 மணியளவில் அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் - சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவர் , சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு காலை சிற்றுண்டி உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு முன்னிலை வகிக்கிறார்.

நான் (வட்ட செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன்) தலைமை வகிக்கிறேன்.

எனவே இந்நிகழ்வில் எழும்பூர் 99 வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாகமுகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை உறுப்பினர்கள் (BLC3), மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மகளிர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 72–வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நேற்று (16.11.2025) துவக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

2,552 செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி!

மேயர் ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு!

சென்னை,நவ.18-

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப்பிராணி உரிமம் பெறும் முறை நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் செல்லப்பிராணிக்களுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுபடுத்தவும், இதன்மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (ஆன்லைன் போர்டல்) மாண்புமிகு மேயர் அவர்களால் 03.10.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பதிவு செய்யும் உரிமையாளர்களுக்கு செல்லப் பிராணிகளுக்கான உரிமை பதிவு செய்தல், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி நாய்களுக்கு செலுத்துதல் மற்றும் மைக்ரோசிப்பிங் பொருத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணியை விரிவுபடுத்தும் வகையில், செல்லப்பிராணி வளர்ப்பவர்களின் வசதிக்காகவும், செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு உரிமம் பெறுவதற்கும், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, செல்லப் பிராணிகளுக்கு மைக்ரோ சிப் பொருத்துவதற்காகவும் 09.11.2025, 16.11.2025 மற்றும் 23.11.2025 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம் நடத்திட பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்டமிடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக, 09.11.2025 அன்று செல்லப் பிராணிகளுக்கான 7 சிகிச்சை மையங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டதில், 767 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோ சிப் பொருத்தி உரிமம் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நேற்று (16.11.2025) திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுபாட்டு மையத்திலும், என மொத்தம் 7 மையங்களில் இச்சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில், திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட புளியந்தோப்பில் உள்ள செல்லப்பிராணிகள் சிகிச்சை மையத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில், வளர்ப்பு நாய்களுக்கு கால் நடை மருத்துவர்களால், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசிசெலுத்துதல், மைக்ரோ சிப் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் பணி நடைபெற்றதை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பார்வையிட்டுஆய்வு செய்தார்.

பின்னர் செல்லப்பிராணிகள் வளர்க்கும் உரிமையாளர்களிடம் இம்முகாம் தொடர்பாக கலந்துரையாடி, உள்ளாட்சி அமைப்பு சட்ட விதிமுறைக்குட்பட்டு செல்லப் பிராணிகளை பாதுகாப்பாக வளர்த்திட உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று 7 மையங்களில் நடைபெற்ற முகாம்களில் 2,552 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோ சிப் பொருத்தி செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

இதுவரை, மொத்தம் 10,820 செல்லப் பிராணி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாம் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (23.11.2025) அன்று மேற்கண்ட 7 மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடத்தப்படவுள்ளது.